[2010 ஏப்ரல் 26

இணைப்பு–I

(761 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அறிவிப்புகள் – 2010-2011

சென்னை மாநகராட்சி

1. தண்டையார்பேட்டையில் இயங்கிவரும் தொற்றுநோய் மருத்துவமனை தென்னிந்தியாவிலேயே பெரிய மருத்துவ மையமாகும். இம்மருத்துவமனை 1914 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இதன் கட்டடங்களையும் அதிலுள்ள வசதிகளையும் மேம்படுத்தும் அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, 360 படுக்கைகளைக் கொண்ட புதிய கட்டடங்களைக் கட்டவும், வசதிகளை அதிகரிக்கவும் ரூ.21 கோடி மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதற்காக ரூ.16 கோடி, அரசு மானியமாக கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடுசெய் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.5 கோடியை சென்னை மாநகராட்சி தனது பொது நிதியிலிருந்து ஏற்கும். இத்திட்டம் 12 மாதங்களில் செய்து முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

2. மாநகராட்சியின் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்தவும், அதன் செயல்பாடுகள் மக்களை விரைவில் சென்றடையவும் விரிவான மின் ஆளுமைத் திட்டம் ரூ.12.07 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

நகராட்சி நிர்வாக இயக்குநரகம்

3. திருவண்ணாமலை நகராட்சிக்கு, சாத்தனூர் அணையை நீராதாரமாகக் கொண்டு, ஒரு புதிய குடிநீர்த் திட்டம் ரூ.36.66 கோடி மதிப்பீட்டில், ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் (KfW) நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும்.

[2010 ஏப்ரல் 26

4. கடையநல்லூர் நகராட்சிக்கான புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், *2008-2009* ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. தற்போது, இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் முடிவுற்று, ரூ.*21.40* கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இக்குடிநீர்த் திட்ட மேம்பாட்டுப் பணிகள் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதி ஆதாரத்துடன் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

5. கோவில்பட்டி நகராட்சிக்குத் தனியாக ஒரு குடிநீர்த் திட்டம் ரூ*80* கோடி மதிப்பீட்டிலும், காயல்பட்டினம் நகராட்சிக்குத் தனியாக ஒரு குடிநீர்த் திட்டம் ரூ. *30* கோடி மதிப்பீட்டிலும், செயல்படுத்த விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கான நிதியாதாரம் இறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டவுடன், இத்திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

6. நகர்ப்புற உள்ளாட்சிகளில் அமைந்துள்ள மண் மற்றும் கற்சாலைகளை தார்ச் சாலைகளாகவும், சிமெண்ட் சாலைகளாகவும் மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ் சுமார் *500* கி.மீ. நீள மண் சாலைகள், ரூ.*60* கோடி மதிப்பீட்டில், தார்ச் சாலைகள்/சிமெண்ட் சாலைகளாக மேம்படுத்தப்படும்.

7. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கென, *10* நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், *200* புதிய குடியிருப்புகள், ரூ. *11.65* கோடி மதிப்பீட்டில் கட்டித்தரப்படும்.

பேரூராட்சிகள் இயக்குநரகம்

8. பெரும்பான்மையான பேரூராட்சிகளிலுள்ள பேருந்து நிலையங்களில் ஓடுதளங்கள் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளன. இதனால், மழைக் காலங்களில் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறார்கள். *22* பேரூராட்சிகளில் இத்தகைய நிலையிலுள்ள பேருந்து நிலையங்கள், ரூ. *3.50* கோடி மதிப்பீட்டில் கான்கிரீட் ஓடுதளங்களாக மேம்படுத்தப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 26]

9. திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஒட்டன்சத்திரம் பேரூராட்சியின் மக்கள் தொகை மற்றும் வருவாய் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு, அதனை இரண்டாம் நிலை நகராட்சியாக நிலை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

10. நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள கீழ்வேளூர் பேரூராட்சியில் ஒரு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

11. சென்னை மாநகர் மற்றும் அருகாமையிலுள்ள நகர்ப்புறப் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்புத் திறனை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், கோயம்பேட்டில் கூடுதலாக நாள் ஒன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள், ரூ.130 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.

12. மனிதர்களைக் கொண்டு கழிவு நீரகற்றலை தவிர்ப்பதில் அரசு உறுதியாக உள்ளது. இதற்கென 45 புதிய ஜெட்ராடிங் மற்றும் இதர இயந்திரங்கள் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

13. வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, 6 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 64 வழியோரக் குடியிருப்புகளுக்கு காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கையை நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும் வகையில் ரூ.1,400 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்தது. விரிவான கலந்தாய்வுக்குப்பின் தற்போது இந்த திட்ட அறிக்கை நாளொன்றுக்கு 270 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும் வகையில் ரூ.1800 கோடி மதிப்பீட்டில்

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 26

திருத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விரிவான அறிக்கையை ஆய்வு செய்ய ஒரு ஆலோசகர் நியமிக்கப்பட்டு அவரது பூர்வாங்க அறிக்கை பெறப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்திற்கு ரூ.1,500 கோடி வரை நிதியுதவி செய்ய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு நிறுவனம் (HUDCO) இசைவளித்துள்ளது. ஆலோசகரது முடிவான அறிக்கை பெறப்பட்டபின் இத்திட்டத்திற்கான மொத்த செலவிற்கும் நிதியாதாரம் ஏற்பாடு செய்யப்பட்டு நடப்பு நிதியாண்டில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

14. 2008-2009 ஆம் ஆண்டில், மதுரை மாவட்டத்தில் மேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. தற்போது கலந்தாய்வுக்குப்பின் இத்திட்டம் விரிவாக்கப்பட்டு மதுரை மாவட்டத்தில் மேலூர், திருமங்கலம், அவனியாபுரம் நகராட்சிகள், அ.வெள்ளாளப்பட்டி, பரவை, விளாங்குடி, திருநகர், அலங்காநல்லூர், பாலமேடு பேரூராட்சிகள், 1,430 குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரி பேரூராட்சி ஆகியவற்றிலுள்ள சுமார் 12,15,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.806 கோடி மதிப்பீட்டில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் நிதி ஆதாரம் பெற்றும், குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின் நிதியாதாரம் பெற்றும், செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

15. விருதுநகர் மாவட்டத்தில் 7 பேரூராட்சிகள் மற்றும் 11 ஒன்றியங்களைச் சேர்ந்த 1,457 குடியிருப்புகளிலுள்ள 11,00,000 மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.572 கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறைந்தபட்சத் தேவைத் திட்ட நிதியாதாரத்துடன் செயல்படுத்தப்படும்.

16. புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, அன்னவாசல், பொன்னமராவதி, குண்ணாண்டார்கோயில் மற்றும் புதுக்கோட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 1130 குடியிருப்புகளிலுள்ள 3,20,000 மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.127.50 கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம், குறைந்தபட்சத் தேவைத் திட்ட நிதியாதாரத்துடன் செயல்படுத்தப்படும்.

2010 ஏப்ரல் 26]

17. திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி மற்றும் மணச்சநல்லூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 204 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 1,13,000 மக்கள் பயனடையும் வகையில், ரூ.22 கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறைந்தபட்சத் தேவைத் திட்ட நிதியாதாரம் கொண்டு செயல்படுத்தப்படும்.

18. கிராமப்புறங்களிலுள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்க உருவாக்கப்பட்ட ஜல்மானி திட்டத்தின்கீழ் குடிநீர் சுத்திகரிப்பு கலன்கள் 6,000 பள்ளிகளில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன் நிறுவப்படும்.

19. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகளை மேம்படுத்திட, கருணை அடிப்படையில், இளநிலை வரைவு அலுவலர், இளநிலை உதவியாளர், பதிவறை எழுத்தர் ஆகிய பணியிடங்களில் 112 நபர்களுக்கு பணி நியமனம் வழங்கப்படும்.

20. மத்திய அரசின் கிராமக் குடிநீர்த் திட்ட விதிமுறைகளின்படி 7,000 கிராம குடியிருப்புகளிலுள்ள, முழுமையாகக் குடிநீர் வசதி பெறாத மக்களுக்கு, ரூ.380.61 கோடி மதிப்பீட்டில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் குடிநீர் வசதி செய்து தரப்படும்.

21. 19 மாவட்டங்களில், குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 1009 கிராம குடியிருப்புகளிலுள்ள 5,71,000 மக்கள் பயனடையும் வகையில், ரூ.173.50 கோடி மதிப்பீட்டில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன், குடிநீர் வசதி செய்து தரப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS